# உலக ஓட்டிசம் விழிப்புணர்வு தினம் - 02 சித்திரை 2019

# WORLD AUTISM AWARENSS DAY - 02 APRIL 2019




தொழில்நுட்ப உதவிகளுடன் ஆர்வமுடன் பங்கெடுப்போம்

ASSISTIVE TECHNOLOGIES ACTIVE PARTICIPATION

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூர நோக்கு

நடத்தைசார் சமூக இசைவாக்க உருவாக்கல்.

## பணி நோக்கு

பரிவிரக்க அன்பின் ஊடாக
கல்வி, மருத்துவ இடையீடுகளின் மூலம்
சமூக பொருத்தப்பாட்டுடன், மாண்போடு வாழ
உடல், உள, அறிவு, உணர்வுசார்
திறன் விருத்தியை வழங்குதல்.

**தீரனியத்தின் வளர்ச்சியில் இதுவரை....**

"எண்ணியது எண்ணியாங்கு எய்த"... இதுவரை எம்மோடு தோள்கொடுத்து உதவிய நல்லுள்ளங்கள், தொண்டர் அமைப்புகளான அனைத்துலக மருத்துவர் நல அமைப்பு - அமெரிக்கா, எமது சமூகம் - கனடா, எமது சமூகம் - பிரித்தானியா, அகவொளி வளையம் - லண்டன், உலகம் முழுவதும் பரந்து வாழும் கணிய அளவியளார்கள், அருட்தந்தை பாக்கிய ரஞ்ஜித் அறக்கட்டளை - கனடா, மட்டக்களப்பு மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் - பிரித்தானியா ஆகிய அமைப்புக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

"நன்றி மறப்பது நன்றன்று"...

**– தீரனியம் குடும்பம்**


**"தீரனியம்" திறந்த பாடசாலை, பயிற்சி நிலையம்**

18, கோவிந்தன் வீதி, மட்டக்களப்பு.

மட்டக்களப்பு, இலங்கை.

தொலைபேசி இல. 065 2222434, மின்னஞ்சல்: mictrinco@yahoo.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

மாற்றாற்றல் அல்லது விஷேட தேவையுள்ள சிறுவர்களினது நலன் கருதி, தமிழ் மொழியில் வெளியிடப்படும் தீரனியன் என்னும் இந்த பயிற்சி கைநூலினை வெளியிட, நிதிப் பங்களிப்புச் செய்வதனை இட்டு மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறோம்.

இந்தப் பயிற்சிக் கையேட்டின் உருவாக்கத்தில் தமது பயன்தரு நேரத்தினை முதலீடாக்கிய அருட்சகோதரர் மரியதாஸ் அவர்களுக்கும் வைத்தியர் யூடி ரமேஸ் ஜெயக்குமார் அவர்களுக்கும் எமது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த பயிற்சிக் கையேடானது ஓட்டிசம் அல்லது தற்சிந்தனை நிலையில் உள்ள அல்லது அடையாளம் காணப்பட்ட சிறுவர்களின் மேம் பாட்டிற்காக அர்ப்பணிப்புடன் சேவை புரியும் அனைத்து பங்குதாரர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும் என நம்புகிறோம்.

எதிர்காலத்தில் தீரனியம் பாடசாலை, பயிற்சி நிலையம் தனது பணியினை மேலும் விரிவுபடுத்தி, பயனுள்ள சேவைகளை சமூகத்திற்கு வழங்கவேண்டும் என வாழ்த்துகிறோம்.


நன்றி

**இராஜநாயகம் கோகிலநாத்**
முகாமையாளர் - நிகழ்ச்சி மற்றும் மானியம்,
நீலன் திருச்செல்வம் நம்பிக்கை நிதியம்,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WORLD AUTISM AWARENESS DAY - 2 APRIL



"On World Autism Awareness Day, let us reaffirm our commitment to promote the full participation of all people with autism, and ensure they have the necessary support to be able to exercise their rights and fundamental freedoms."
Secretary-General António Guterres

**2019 World Autism Awareness Day observance**

"Assistive Technologies, Active Participation"

Tuesday, 2 April 2019

United Nations Headquarters, Trusteeship Council Chamber

Autism awareness has grown worldwide in recent years. For the United Nations, the rights of persons with disabilities, including persons with autism, as enshrined in the Convention on the Rights of Persons with Disabilities (CRPD), are an integral part of its mandate.

When world leaders adopted the 2030 Agenda for Sustainable Development in 2015, the international community reaffirmed its strong commitment to inclusive, accessible and sustainable development, and pledged that no one would be left behind. In this context, the participation of persons with autism as both agents and beneficiaries is essential for the realization of the Sustainable Development Goals (SDGs).

For many people on the autism spectrum, access to affordable assistive technologies is a prerequisite to being able to exercise their basic human rights and participate fully in the life of their communities, and thereby contribute to the realization of the SDGs. Assistive technology can reduce or eliminate the barriers to their participation on an equal basis with others.

The Convention on the Rights of Persons with Disabilities acknowledges



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the instrumental role of assistive technologies in enabling persons with disabilities to exercise their rights and freedoms. It obliges States that are party to the Convention to promote availability and use of such technologies at an affordable cost, to facilitate access to them, and to undertake or promote research and development into new such technologies.

While technological advances are continuous, there are still major barriers to the use of assistive technologies, including high costs, lack of availability, lack of awareness of their potential, and a lack of training in their use. Available data indicates that, in several developing countries, more than 50% of the persons with disabilities who need assistive devices are not able to receive them.

In September 2018, the UN Secretary-General launched a new Strategy on New Technologies, which aims to define how the United Nations system will support the use of these technologies to accelerate the achievement of the 2030 Sustainable Development Agenda. The Strategy is also intended to facilitate the alignment of these technologies with the values enshrined in the UN Charter and the Universal Declaration of Human Rights, and the norms and standards of International Law, including the CRPD and other human rights conventions. These values include equality and equity, inclusion and transparency. Design and use of new technologies, according to the Strategy, should be guided by a rights-based and ethical perspective.

In the context of the Secretary-General's Strategy, the 2019 World Autism Awareness Day observance at UN Headquarters in New York will focus on leveraging the use of assistive technologies for persons with autism as a tool in removing the barriers to their full social, economic and political participation in society, and in promoting equality, equity and inclusion. Topics to be addressed through discussions with self-advocates and experts include:

- The Internet and digital communities: Leveling the playing field
- Independent living: Smart home technology and more
- Education and employment: Communication and executive functioning
- Telemedicine: Opening the doors to healthcare
- The right to be heard: Political participation and advocacy

In 2008, The United Nations General Assembly unanimously declared 2 April as World Autism Awareness Day. The 2019 observance of the Day at UN Headquarters is organized by the UN Department of Global Communications and Department of Economic and Social Affairs, in close cooperation with persons with autism and their representative organizations.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயிடம் இருந்து ஒரு மடல்...

**டாக்டர் காவேரி சிவரூபன்** - அமெரிக்கா

"ஓட்டிசம்" (Autism) எனும் நிலைமை நரம்புத்தொகுதியில் முக்கியமாக மூளைவிருத்தியில் ஏற்படுகின்ற ஆசாதரண மாற்றத்தினால் (Neuro Developmental Disorders) உருவாகின்றது. இதனால் பாதிக்கப்பட்டவர்களில் பேச்சுவன்மையில் தடங்கல் (Impaired Communication), சமூக தொடர்பாடல்கள் பாதிக்கப்படல் (Impaired Social Communication), மீண்டும், மீண்டும் செய்யும் நோக்கமில்லாத உடலசைவுகள் (Repititive Movements) என்பன "ஓட்டிசத்தின்" பிரதானமான மூன்று அறிகுறிகளாகும். "ஓட்டிசம்" என்ற நிலைமை ஏற்படுவதற்கான அடிப்படை காரணம் என்னவென்று இன்றுவரை உறுதியாகக் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆராய்ச்சிகள் இன்றும் தொடர்ந்தாற்போல் உள்ளன. "ஓட்டிசம்" என்பது வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் நிலையாகும். இதனைப் பூரணமாக குணப்படுத்துவதற்கான மருந்துகளோ, சிகிச்சைகளோ மருத்துவத்துறையில் இதுவரையில் இல்லை. ஆனால் இந்த நிலைமையை இனங்கண்டு சரியான இடையீடுகளைக் (Interventions) கால தாமதமின்றி ஆரம்பிப்பதன் மூலம், இந்நிலைமை கடினமாவதை தடுத்து, "தீரனியர்" ஓரளவேனும் சாதாரண குழந்தைகள் போல சமுதாயத்தில் வாழ வழிவகுக்க முடியும். பலதரப்பட்ட ஆற்றுமை உள்ளவர்களை அரவணைத்து ஏற்றுக்கொள்ளும் எடுத்துக்காட்டான சமூகம் ஒன்றில் "தீரனியர்களின்" சுயமுன்னேற்றத்தில், அவர்களின் நடத்தைகளைச் சரியாக நெறிமுறைப் படுத்துவதற்கான ஆரம்பநிலை, தீவிர இடையீடுகளுக்கான நிலையங்கள் (Centers for Early Intensive Behavioral Intervientión - EIBI) விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களை கொண்ட பாடசாலைகள் (Special Education Schools), பொருத்தமாக மீள் உருவாக்கம் செய்யப்பட்ட விளையாட்டுக்கள் (Adapted Games), பொருத்தமாக மீள் உருவாக்கம் செய்யப்பட்ட தொழிற்பயிற்சி, தொழில்கள் (Adapted Vocational Training and Adapted Jobs), கட்டமைக்கப்பட்ட மீள் உருவாக்கம் செய்யப்பட்ட பல்கலைக்கழகக் கல்வி முறைகள் (Structured Adapted University Education), வயது வந்த "தீரனியர்கள்" குழுவாக இருக்கக்கூடிய வீடுகள் (Group Homes),



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்த "தீரனியர்களுக்கான" பகல் பராமரிப்பு நிலையங்கள் (Adult Day Care Centers), தங்கி வாழும் நிலையில் உள்ளவர்களுக்கான அடிப்படை வசதிகள் என்பன "தீரனியர்களின்" மேம்பட்ட வாழ்க்கைக்கு உறுதுணையாக இருக்கும்.

பதினைந்து வயது "தீரனின்" அம்மா என்ற முறையில் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புவது என்னவென்றால் எமக்குள் ஏற்படும் விழிப்புணர்வு (Awareness), ஏற்றுக்கொள்ளல் (Acceptance) இசைவாக்கப்படுதல் (Adaption), தட்டிக்கொடுக்கும் மனப்பாங்கு (Appreciation), குழந்தைகளின் தேவைகளுக்காக ஆதரித்து வாதாடுதல் (Advocacy) என்பன "தீரனியர்களின்" சந்தோசமான, வெற்றிகரமான வாழ்க்கைக்கு முக்கியமானவையாகும்.

## விழிப்புணர்வு (Awareness)

எமது சமூகத்தில் உள்ள பெற்றோர், சகோதரர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள், சமூக தலைவர்கள், ஆன்மீகத் தலைவர்கள், அரசியல் வாதிகள் உட்பட அனைவரும் "தீரனியர்" குறித்து கட்டாயம் அறிந்திருத்தல் வேண்டும். எனவே சமூக மட்டத்தில் "தீரனியர்" குறித்த விழிப்புணர்வு, அறிவூட்டல் செயற்பாடுகள் மிகவும் அவசியமானவை.

## ஏற்றுக்கொள்ளல் (Acceptance)

நாங்கள் எல்லோரும் "தீரனியர்" குறித்து எவ்வளவுதான் அறிந்திருந் தாலும், ஒரு குடும்பத்தில் உள்ள சாதாரண பிள்ளைகளையும், "தீரனியர்களையும்" ஒருமுகமாக பார்ப்பதென்பது சவாலாகவே அமைகிறது. இவ்வாறான சவால் களை ஏற்றுக்கொள்வதற்கான மனவலிமையையும், பயிற்சிகளையும் பெற்றுக் கொண்டதன் பின்னர் எமது "தீரனிய" பிள்ளைகளின் வாழ்க்கைத் தடத்தில் நேர்முகமான மாற்றங்களை நிச்சயம் ஏற்படுத்த முடியும்.

## இசைவாக்கப்படுதல் (Adaption)

பெற்றோராகிய நாமும் மருத்துவர்கள், சிகிச்சையாளர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் உதவியுடன் எமது வாழ்க்கை முறையில் ஏற்படுத்திக்கொள்ளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்கள் மூலம் "தீரனியர்களின்" வாழ்க்கை மகிழ்ச்சியாகவும், வெற்றி கரமாகவும் அமைவதற்கு உதவ முடியும்.

## தட்டிக்கொடுத்தல் (Appreciation)

"தீரனியர்களை" எப்பொழுதும் மகிழ்வூட்டி, வலுவூட்டி, தட்டிக் கொடுப்பதன் மூலமாக அவர்களது வாழ்க்கையில் முன்னேற்றகரமான மாற்றங்களை ஏற்படுத்தலாம். அவர்களுக்குள்ளும் புதிய, சரியான செயல் களைச் செய்வதற்கான உற்சாகம் பிறக்கும்.

## ஆதரித்து வாதாடுதல் (Advocacy)

பெற்றோராகிய எமக்குத்தான் எம் பிள்ளைகளில் உள்ள பலம், பலவீனம், போன்றவை கூடுதலாகத் தெரியும். இவர்கட்கு ஏற்ற கல்வி, பாதுகாப்பு, அங்கீகாரம், உரிமைகள் என்பவற்றை சட்டமூலங்களாக நடைமுறைப்படுத்துவதற்குச் சமுதாயத்தில் முன்னின்று குரல் கொடுக்க வேண்டும். இவை எமது குடும்ப "தீரனியர்களுக்கு" மட்டுமல்ல நாடு முழுவதும் பரந்து இருக்கும் ஏனைய "தீரனியர்களிற்கும்" வரப்பிரசாதமாக அமையும்.

## தீரனியம்

"பவனிற்கு தற்போது எட்டு வயது. அவன் பிறந்த மூன்றாம் மாதம் தாயின் முகம் பார்த்திருக்க வேண்டும். ஒன்பதாம் மாதம் சத்தங்களிற்கு உடல் அசைவுகளை காட்டியிருக்க வேண்டும். மற்றவர்களைக் காணும் போது உற்சாகமாக இருந்திருக்க வேண்டும். ஒரு வயதில் மெதுவாக கதைக்க ஆரம்பித்திருக்க வேண்டும். தனது தேவைகளிற்கான அறிகுறிகளை அழுகை மூலம் வெளிப்படுத்தியிருக்க வேண்டும். இரண்டு வயதாகும் போது தனது பெற்றோரை, சகோதரர்களை இனங்கண்டு அவர்களுடன் கூடி விளையாடி மகிழ்ந்திருக்க வேண்டும். விளையாட்டுப் பொருட்களுடன் விளையாடி இருக்க வேண்டும். மூன்று வயதில் மற்றவர்களுடன் வெளியில் போக, விரும்பியதை கேட்க, சேர்ந்து விளையாட, அம்மாவின் முகம் பார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைக்க என்று இவையெல்லாம் சாதாரணமாக நடந்திருக்க வேண்டும். இதுவரை இவை நடக்கவில்லை.

பவன் ஒரு தனி உலகம். இதுவரை அவன் வாயிலிருந்து தாய்மொழி வரவேயில்லை. அவனது பாஷை இதுவரை யாருக்கும் விளங்கவில்லை. ஒலிகளிற்கு பெரிதாக மாற்றங்களைக் காட்டவில்லை. அவனுக்கு விருப்பமான காருடன் மட்டும்தான் அவனது நேரம் அதிகம் செலவிடப்படுகிறது. தனது சகோதர, சகோதரிகள், பெற்றோர், பாடசாலையில் சக மாணவர்களுடன் சேர்ந்து விளையாட, கூடிக்குலாவி அகம் மகிழ அவனால் முடியவில்லை. யார் இந்த பவன்? இவன் ஒரு மாற்றுத்திறனாளி. அவனிடம் இருக்கும் ஆளுமைகள், ஆற்றல்கள் மற்றைய சிறுவர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவை. ஆனாலும் பவனால் ஏனையவர்கள் போல செயற்பட முடியும், சாதிக்க முடியும்.

## தற்சிந்தனையாளர்கள் (ஓட்டிசம்)

உலகலாவிய ரீதியாக, பிறக்கின்ற பிள்ளைகளில் "ஓட்டிசம்" எனப் படுகின்ற மாற்றுத்திறனாளிகள் மிக அதிகளவில் இனங்காணப் படுகின்றார்கள். அமெரிக்காவில் பிறக்கின்ற 68 குழந்தைகளில் ஒருவர் என்ற விகிதத்திலும் இங்கிலாந்தில், அவுஸ்ரேலியாவில் 100 குழந்தைகளில் ஒருவர் என்ற அளவிலும், ஆச்சரியமாக இலங்கையில் பிறக்கின்ற 93 குழந்தைகளில் ஒருவர் எனவும் இனங்காணப்பட்டுள்ளது. அத்துடன் அமெரிக்காவில் 3.2 மில்லியன் மக்கள் ஓட்டிசத்துடன் வாழ்கிறார்கள். பெண் பிள்ளைகளை விட ஆண் பிள்ளைகளில் இதன் தாக்கம் அதிகம். நியூட்டன், அல்பேர்ட் ஐன்ஸ்டீன், சார்ள்ஸ் டார்வின், பில்கேட்ஸ், அப்துல் கலாம் போன்றவர்களிலும் மிதமான அளவில் "ஓட்டிசம்" இருந்ததாக கூறப்படுகின்றது.

1943 டாக்டர் லியோ கானர் என்ற உளநல மருத்துவர், ஓட்டிசம் குறித்த விபரிப்புக்களை வெளியிட்டார். அன்று முதல் உலகளாவிய ரீதியாக இப்பிரச்சினைகள் இனங்காணப்பட்ட போதிலும் பெரும்பாலான நாடுகளில் இன்றுவரை இப்பிள்ளைகளுக்கான தனித்துவமான இடையீடுகள், பாடசாலைகள் ஆரம்பிக்கப் படவில்லை. பொதுவாக இவ்வாறு இனங்காணப்படுகின்ற பிள்ளைகள் மூளை விருத்தி சார்ந்த மாற்றுத்திறனாளிகள் பாடசாலைகளுக்கோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண பாடசாலைகளிற்கோ அனுப்ப முடியாத அளவில் அவர்கள் தனிமைப்பட்டு வீடுகளிலேயே உள்ளார்கள்.

இலங்கையிலும் சிறுவர் மருத்துவர்கள், மனநல மருத்துவர்கள் இப்பிரச்சினைகளை இனங்கண்ட போதும், அவர்களுக்கான விசேட அணுகு முறைகள், கற்பித்தல் முறைகள் சாதாரண பாடசாலைகளுடன் இணைத்து விடுதல், பெற்றோர்களிற்கான வழிகாட்டல்கள், சமூக விழிப்புணர்வுச் செயற்பாடுகள் மிகக் குறைவாக உள்ளன. அரசாங்கமும் இதனது தேவையை இதுவரை சரியாக உணர்ந்து கொள்ளவில்லை.

## "ஓட்டிசம்" பிள்ளைகளிற்கான பாடசாலைகள்

இனங்காணப்படுகின்ற மாற்றுத்திறனாளிகளில் சாதாரண **(Mild)**, மிதமான **(Moderate)**, பாரிய **(Severe)** அளவில் பிரச்சினைகள் இருப்பதை கண்டு கொள்ளலாம். பிள்ளைகள் மூன்று வயதை அடைவதற்குள் முதலில் பெற்றோர்களாலும் பின்னர் முன்பள்ளி ஆசிரியர்களாலும் இனங்காணப்படுவர். இவர்களில் கண் தொடர்பு **(Eye contact)**, சமூக தொடர்பாடல் **(Social Communication),** பாதிக்கப்படுவதுடன் தமது தேவைகளை கேட்டுப் பெற்றுக் கொள்ளுதல், சேர்ந்து விளையாடுதல், உடல் உணர்வுகளை வெளிக்காட்டுதல் போன்றவையும் பாதிக்கப்படுவதுடன் இவர்களது பேச்சு/ மொழிநடை மாறுபட்டதாகவும் அமையும். ஒரே விடயத்தை மீண்டும் கதைக்கலாம். நாங்கள் சொல்லும் விடயத்தையே மீண்டும் சொல்லலாம் **(Ecolalia)** அல்லது பதிலளிக்காமல் தன்வழியே குறிப்பிட்ட விளையாட்டு அல்லது செயலுடன் **(Sterotype),** ஈடுபடலாம். இம்மாணவர்களை ஆரம்ப வகுப்புகளில் சாதாரண மாணவர்களுடன் சேர்த்து கல்விச் செயற்பாடுகளை முன்னெடுப்பது கடினமாக அமையும். இல்லாவிட்டால் இதற்கென பயிற்றுவிக்கப்பட்ட விசேட ஆசிரியர்களின் உதவியுடனேயே கற்பித்தல் செயற்பாடுகள் இடம் பெற வேண்டும். இருந்த போதும் இவர்களிற்கான பிரத்தியேக பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டு, அங்கு ஆரம்ப செயற்பாடுகளை ஆரம்பித்து, அவற்றில் முன்னேற்றம் கண்டுள்ள சிறுவர்களை ஆசிரியர், பெற்றோர், சகமாணவர்கள், ஆகியோருடன் கலந்துரையாடி சக மாணவர்கள் உட்பட அனைவரும் ஏற்றுக்கொண்டு வகுப்பறைச் செயற்பாடுகளில் ஈடுபட வைப்பதே மிகவும் பயனுடையதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாரா பிற்றர் (Sara Bitter) ஓர் அமெரிக்க வழக்கறிஞர். முன்பள்ளி வகுப்பிலிருந்து ஒவ்வோர் ஆண்டும் அமெரிக்காவில் பள்ளியாண்டு தொடங்கும் போது, தன் மகனின் வகுப்பிற்குச் சென்று தன் மகனைப் பற்றியும், மகனின் பலவீனங்கள், இயலாமைகள் பற்றியும் மகனின் ஆசிரியர்களிற்கும் வகுப்பு மாணவர்களிற்கும் ஒரு செயன்முறை கலந்துரையாடலை நடத்துவது அவரின் வழக்கம்.

தனது மகனின் விருப்பு வெறுப்புகள், ஆர்வம், பொழுது போக்குகள், பலம், பலவீனம், அவனின் நாளாந்தச் செயற்பாடுகளை செய்வதில் உள்ள சவால்கள் பற்றி அவர் அவர்களுடன் கலந்துரையாடுவார். இதனால் அவரது மகனிற்கும், ஆசிரியர்களிற்கும் மற்றைய மாணவர்களுக்கும் இடையே புரிந்துணர்வை ஏற்படுத்த உதவியது. அங்கு கிடைத்த பின்னூட்டல் சாராவை மேலும் ஊக்கப்படுத்தியது. இச்செயன்முறை போல அனைத்து மாணவ மாற்றுத்திறனாளிகளுக்கும் பயன்பட வேண்டும் என்ற அவரது அவாவே "Ethan the Brave" என்ற புத்தகமாக மலர்ந்தது. 2015 ஆம் ஆண்டு, அமெரிக்காவின் சின்சினாற்றி நகரில் நடந்த மாற்றுத்திறனாளிகளிற்கான குறும்பட விழாவில், தன் மகனின் கதையை படமாக்கி வெளியிட்டார். இக் குறும்படத்தினூடாகவும், புத்தகத்தினூடாகவும் மாணவ மாற்றுத்திறனாளிகளை புரிந்துணர்வுடன் வரவேற்கவும், ஆதரவளிக்கவும் வகுப்பறையில் பயன்படுத்தக்கூடிய செயற்றிட்டமொன்றை உருவாக்கினார். இக்கதையின் பிரதானமான பாத்திரமான "தீரன்" பல மாற்றுத்திறனாளிகளின் அன்றாட அனுபவத்தினூடாகவே அமையப் பெற்றுள்ளான்.

குறித்த ஒரு இயலாளியின் பெயரின் சமூக நாணம், சமூக அச்சம் களையப்பட்டு, "தீரனியம்" என்கின்ற தமிழ்ச்சொல் இங்கு "ஓட்டிசம்" மாற்றுத் திறனாளிகளைக் குறிக்க பயன்படுகின்றது. அனைத்து மாற்றுத் திறனாளிகளும் பல சவால்களை தமது அன்றாட வாழ்வில் எதிர் நோக்கினாலும், தாமும் மற்றைய சாதாரண மாணவர்களைப் போல கற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். ஆங்கிலத்தில் உள்ள மூலப்பிரதியை தமிழில் அமெரிக்காவில் உள்ள வைத்திய கலாநிதிகளான திருமதி சிவானி பத்மராஜா, திருமதி காவேரி சிவரூபன் ஆகியோரின் மொழிபெயர்ப்பை அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO) இலவசமாக அச்சடித்து வெளியிட்டுள்ளது. இரண்டு வருடங்களிற்கு முன்னர் வெளிவந்த "கரிதாஸ்" திரைப்படம் தீரன் பற்றியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீரனியம் மாற்றுத்திறனாளிகள் பாடசாலை

மட்டக்களப்பில் உளநல மருத்துவர்கள், குழந்தை நல மருத்துவர்கள், பெற்றோர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மருத்துவம்சாரா உத்தியோகத்தர்கள் என பலதரப்பட்டவர்களும் தீரன்களை இனங்கண்டார்கள். மருத்துவப் பரிசோதனைகள், சாதாரண சிகிச்சை முறைகள், என்பன கொடுக்கப்பட்ட போதிலும், இவர்களிற்கென தனியான பாடசாலை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற நீண்ட கால ஆவல் பரவலாக உணரப்பட்டது. அண்மையில் கத்தோலிக்க திருச்சபையின் Brothers of Charity (பிரதர்ஸ் ஒவ் சரிட்டி) தன்னார்வ தொண்டர் அமைப்பு உளநல மருத்துவர்கள், குழந்தை நல மருத்துவர்கள், பொது மருத்துவர்கள், பேச்சு சிகிச்சையாளர், தொழில்வழி சிகிச்சையாளர், இயன்மருத்துவர், சமூக சேவை உத்தியோகத்தர்கள், விசேட கல்வியலகு ஆசிரியர்கள், அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள், நலன் விரும்பிகள், பாடசாலை அதிபர்கள், அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகளுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் பயனாக அமெரிக்காவில் உள்ள அனைத்துலக மருத்துவர் நல அமைப்பின் நிதிப் பங்களிப்புடன் கோவிந்தன் வீதியில் இலங்கை வங்கிக் கிளைக்கு முன்னால் "தீரனியம்" மாற்றுத்திறனாளிகள் பாடசாலை அமையப் பெற்றுள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஐந்தாவது செவ்வாய் கிழமைகளில் நடைபெறும் சிறுவர் வழிகாட்டல் கிளினிக் மூலம் இனங் காணப்படுகின்ற மாற்றுத்திறனாளிகள் இப்பாடசாலையின் பல்வேறு சிகிச்சை முறைகளுக்கு அனுமதிக்கப்படுவார்கள். இங்கு விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட சிகிச்சையாளர்களின் உதவியுடன் இவர்களிற்கான வகுப்பறைச் செயற்பாடுகள் நடைபெறும். அத்துடன் பேச்சு சிகிச்சையாளர், தொழில்வழி சிகிச்சையாளர், இயன் மருத்துவர் என ஒரு ஒழுங்கில் மாற்றுத்திறனாளிகளின் தேவைகளுக்கு ஏற்றாற் போல் உதவுவார்கள். முன்னேற்றம் உள்ள பிள்ளைகள் விசேட தேவைக்குரிய ஆசிரிய ஆலோசனையின் வழிகாட்டலில் அண்மையிலுள்ள பாடசாலைகளில் இணைத்து கண்காணிக்கப்படுவார்கள். கூடிய அளவில் பாதிக்கப்பட்ட, பாடசாலைச் செயற்பாடுகளிற்கு பொருத்தமற்ற மாணவ மாற்றுத்திறனாளிகள் வாழ்வாதார பயிற்சிகளிற்கு **(Vocational Training)** அனுப்பப்படுவதோடு, திறன் சார்ந்தவர்கள் மாவட்டத்திலுள்ள ஏனைய தொழிநுட்பக் கல்லூரிகளில் இணைத்துவிடப்படுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாதாரத்தை, தொழிலைப் பெற்றுக்கொள்ளும் வரை இப்பாடசாலை தீரனியர்களுற்கு உதவியாக அமையும். அத்துடன் மருத்துவ மாணவர்கள், தாதிய மாணவர்கள், பயிலுனர் ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தீரன் குறித்துக் கற்றுக்கொள்ள இப் பாடசாலை உதவி செய்யும். சமூக விழிப்புணர்வு, ஏற்றுக்கொள்ளுதல், உதவிசெய்தல் போன்ற செயற்பாடுகளிற்கான ஆக்கபூர்வமான கொள்கைகளையும், தொடர்ச்சியான கலந்துரையாடல்களையும் தீரனியம் பாடசாலையூடாக மேற்கொள்ள முடியும்.

## "உதவி செய்யும் தொழில்நுட்பத்துடன், ஆர்வத்துடன் பங்கேற்போம்"

## "Assistive technologies, Active Participation"
## World Autism Awairness Day 2nd April 2019

"ஓட்டிசம்" விழிப்பணர்வு நாள் ஒவ்வொரு வருடமும் சித்திரை 2ம் திகதி உலக அளவில் கொண்டாடப்படுகின்றது. இவ்வருடம் இதன் தொனிப் பொருளாக "உதவி செய்யும் தொழில் நுட்பத்துடன், ஆர்வமுடன் பங்கேற்போம்" எனும் தலைப்பை ஐக்கிய நாடுகள் சபை கொடுத்துள்ளது. "ஓட்டிசம்" குறித்த விழிப்புணர்வு அண்மைக்காலங்களில் உலக அளவில் அதிகரித்து வருவதை காணக்கூடியதாக உள்ளது.

ஐக்கிய நாடுகள் (United Nation) சபையால் பரிந்துரைக்கப்பட்ட "விசேட ஆற்றல் உள்ளவர்களுக்கான உரிமைகள்" (Rights of Persons with Disability) உலக தலைவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட 2030 ஆண்டளவிலான "நிலைபேறான அபிவிருத்திக்கு" (Sustainable Development Goals) ஐநாவின் 2015 மாநாட்டில் சர்வதேச சமூகம் உட்படுத்தல் (Inclusive) என்பதற்கு மிகப் பெரிய முக்கியத்துவத்தை கொடுத்துள்ளது. மாற்று ஆற்றலுள்ள அனைவரும் சமூகத்தின் பயன்மிகு பங்குதாரர்கள் இந்த எண்ணக்கருவினுள் பயனாளிகளான "ஓட்டிசம்" பாதிப்பாளர்கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளினுள் முக்கிய பங்கு பற்றுபவர்களாக இனங்காணப்படுகின்றனர்.

"உதவி செய்யும் தொழில்நுட்ப" வசதிகளை பெற்றுக் கொள்வதற்கும், சமூகத்துடன் ஒத்திசைந்த தனிமனித சுதந்திரத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கை முறையை வாழ்வதற்கு உதவுவதன் மூலமாக "ஓட்டிசம்" குழந்தைகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான பங்குதாரர்களாகு கின்றனர். சமவாய்ப்பு, சம சந்தர்பம் என்பவற்றை "ஓட்டிசம்" பாதிப்புள்ளவர்கள் பெற்றுக் கொள்வதற்கு உதவி செய்யும் தொழில்நுட்ப வசதிகள் இவர்களுக்கு பேருதவியாக இருந்து கொள்கின்றன. இதன் மூலமாக அவர்கள் சமூகத்தின் பல்வேறுபட்ட உறுப்புக்களுடன் தொடர்பு கொள்ளும் சாத்தியம் அதிகரிப்பதால் இதுவரை இருந்த பல தடைகளும், தாமதங்களும் களையப்பட்டு அவர்களும் இலகுவாக செயற்படுத்தக்கூடியதான வாய்ப்பு ஏற்படுகின்றது.

இருந்தபோதும் இந்த தொழில்நுட்ப சாதனங்கள் மிகுந்த விலையுள்ள பெறுமதியானவை. அத்துடன் இவை எல்லா நாடுகளிலும் எல்லா பயனாளிகளி னாலும் வாங்குவதற்கான பணவசதி, இலகுவாக கிடைக்கும் வசதிகள் பெரும்பாலான நாடுகளில் இதுவரை இல்லை. இவற்றுடன் இவற்றின் பயன்பாடு குறித்த விழிப்புணர்வு, கையாளுவதற்கான தொழில்நுட்ப அறிவு, அவற்றில் பழுது ஏற்படும்போது திருத்துவதற்கான தொழில்நுட்ப அறிவு பெற்ற தொழில்நுட்பவியலாளர்கள் மிகக் குறைவாக உள்ளனர். தற்போது உள்ள புள்ளி விபரங்களின் படி அபிவிருத்தி அடைந்தவரும் நாடுகளில் ஏறக்குறைய 50% ஆனவர்கள் தமது நாளாந்த செயற்பாடுகளுக்கு இவ்வாறான தொழில்நுட்ப அறிவுடன், இருந்தபோதும் அவர்களால் அவற்றை பெற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் பரிந்துரைப்படி 2019 ஆண்டிற்கான "உலக ஓட்டிசம் தினத்தில்" ஐக்கிய நாடுகள் சபை அமையப் பெற்றுள்ள "நியூயோர்க்" நகரில் பிரகடனப்படுத்தப்படவுள்ள இவ்வருட தொனிப்பொருளான உதவிசெய்யும் தொழில்நுட்பம் "ஓட்டிசம்" பாதிப்புள்ள வர்களை ஏற்றுக் கொள்வதன் ஊடாக இவர்கள் சமூக இசைவாக்கம் பெற்று பொருளாதாரபங்களிப்பு, அரசியல் ஈடுபாடு, சமவாய்ப்பு, சமசந்தர்பத்தை உறுதிப்படுத்தல் என்பவற்றின் ஊடாக இவர்கள் சமூகத்துடன் உள்வாங்கப்பட்டு ஒத்திசைவுடன் வாழ்வதை உறுதிப்படுத்த வேண்டும். இந்த தொழில்நுட்பத்தின் மூலம்:

- இணையவழி/ தொழில்நுட்ப சமூகத்தை உருவாக்குதல்.
- வீடுகளில் ஏற்படுத்தப்படும் தொழில்நுட்பம் ஊடாக சுயாதீனமாக வாழ்வதை உறுதிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றில் தொடர்பாடலிற்கான தொழில் நுட்பத்தை பயன்படுத்துதல்.
- தொலைதூர மருத்துவ வசதிகளை (Tele Medicine)ஏற்படுத்துதல். இதன் மூலமாக நமது நாடுகளில் இல்லாத மருத்துவதுறை வல்லுணர்களை பயன்படுத்துதல். அரசியல் பங்கெடுப்புகளில் பங்கெடுப்பதன் மூலமாக மனித உரிமைகளை சரிவரபின்பற்ற உதவுதல்.

2008 ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட "உலக ஓட்டிசம்" தினத்தை சித்திரை 2 பரிந்துரைக்கப்பட்டு இதுவரை இந்த தினம் உலக அளவில் நினைவு கொள்ளப்படுகின்றது.

---

# தீரனியம்

## ஓட்டிசம் பிள்ளைகளிற்கான திறந்த பாடசாலை பயிற்சி நிலையம்

**18, கோவிந்தன் வீதி, மட்டக்களப்பு, இலங்கை**


**வழங்கப்படும் சேவைகள்**

1. பிள்ளைகளை இனங்காணல் மருத்துவ பரிசோதனை, சிசிச்சை வழிகாட்டல்
2. காலை, மாலை இரு பிரிவுகளில் பாடசாலை செயற்பாடுகள்
3. பேச்சு சிகிச்சை
4. தொழில்வழி சிகிச்சை
5. புலணர்வு தூண்டலிற்கான பயிற்சிகள்
6. நிபுணத்தவம் வாய்ந்த உள்ளூர், வெளியூர் வளவாளர்களினால் ஆசிரியர், பெற்றோர், மாணவர்களுக்கான பயிற்சி
7. பெற்றோர் வலுவூட்டல் செயற்பாடுகள்
8. சமூக மட்ட விழிப்புணர்வு செயற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீரனியம் (Autism)



வாழ வந்த இளங்கதிர்கள்
வார்த்தையில்தான் பிரச்சினைகள்
தொடர்பாடல் மொழியவர்க்கு
தொக்கி நிற்கும் பூங்கதிர்கள்

சமுதாயத் தொடர்புகளில்
சலனமற்று இருப்பவர்கள்
சுயமான நடத்தையோடு
சுயமாக வாழ்பவர்கள்

தனக்கான உலகத்தில்
தனித்து இருப்பவர்கள்
தனக்கான தேவைகளில்
தங்கி இருப்பவர்கள்

தனித்துவத் திறமைகளை
தன்னகத்தே கொண்டவர்கள்
தவித்திடும் உலகு பற்றி
தானறியா பேரொளிகள்

இறையின் கொடையவர்கள்
எமது பொக்கிஷங்கள்
பிறையாய் வளர்ந்து வரும்
பேரின்ப வரமவர்கள்

பாத்திரமாய் சமைக்கவல்ல
பச்சைக்களி மண்ணவர்கள்
சாதித்துக் காட்டுவார்கள்
சாதனைப் பறவைகளாய்

மாலை கோக்க வல்ல
மணக்கும் மலர்ச்செடிகள்
மாறும் அவர் நிலைகள்
மாற்றும் கரங்களாலே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றும் கரங்களின்
# ஐபெரும் மூலகங்கள்

**விழிப்புணர்வு** (Awareness)
தீரனியர் வாழ்வு பெற
தீட்டிடுவோம் திட்டம்
ஊரறிய உலகறிய
உரக்கும் எங்கள் சத்தம்

விழிப்புணர்வு வேண்டுமிங்கு
வெல்வதற்கு அவர்கள்
செழிப்புமிகு நிலை நோக்கி
சென்றிடுவோம் தூரம்!

**ஏற்றுக்கொள்ளல்** (Acceptance)
தனி உலகைத் தன்னுள்ளே
தத்தெடுத்த தீரனியன்
கனியமுதைப் பொழிகின்ற
கடவுள் கொடை வீரன்

எழுந்திடுவோம் எதிர்நீச்சலாக
ஏற்றிடுவோம் அவர்தம் வாழ்வை
வீழ்தல் என்ற சொல்லிருந்து மீண்டு
வெற்றியெனும் வீரநிலையடைவோம்!

**இசைவாக்கப்படல்** (Adaption)
எப்படியோ வாழ்ந்திட்ட நாங்கள்
இசைவாக்கி அவர்களுக்காய் நம்மை
இப்படித்தான் வாழ வேண்டுமென்று
இன்றுடன் முடிவொன்றெடுப்போம்

தீரனியப் பிள்ளைகளின் தேவை
தீவிரமாய் ஆளுக்காள் மாறும்
பெற்றோரே தீரனியர் பாதை
பற்றோடு பாரும் அவர் நடத்தை!

**தட்டிக்கொடுத்தல்** (Appreciation)
தீரனியர் வாழ்வுமுறை மாற்ற
தோள்கொடுப்போம் தோழர்களாக
காரமற்ற வார்த்தைகளைக் கொண்டு
கனிவு மொழி பேசிடுவோம் நன்று

மகிழ்வெனும் ஓடத்தில் ஏற்றி
மாபெரிய பாதைகளைக் காட்டி
திகிலான மனநிலை மாற்றி
திருப்புவோம் தீரனியர் வாழ்வை!

**ஆதரித்து வாதாடுதல்** (Advocacy)
தீரனியர் வாழ்வுநிலை ஓங்க
தேவை நல் ஒளியான உள்ளம்
பாரெங்கும் பரவவேண்டும் செய்தி
பாலர்கள் உரிமைகளை வேண்டி

அர்ப்பணிப்பு ஆரம்பப் படியாய்
ஆளுமை அதிகரித்தல் வேண்டும்
தீரனியர் வாழ்வு சிறக்க
திருப்பமான போராட்டம் வேண்டும்!

• **கவிஞர் காத்தநகர் முகைதீன்சாலி**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறியவர்கள் அல்லது பெரியவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியாமை.



பேசுவது குறைவு அல்லது பேசாதிருத்தல்.



சத்தத்திற்கு கூடுதல் உணர்வை கொடுத்தல் அல்லது உணர்வு இன்றி இருத்தல்.



பொருத்தமற்றவாறு விளையாட்டுகளில் ஈடுபடுதல்



அன்றாட செயற்பாடுகளில் மாற்றங்களுக்கு முகங்கொடுக்க முடியாமைம்



இடத்துக்கு பொருத்தமற்றவாறு அழுதல் அல்லது சிரித்தல்.



ஆபத்து பற்றிய புரிந்துணர்வு இல்லாமை.



அளவுக்கு அதிகமாக செயற்படல் அல்லது செயற்படாதிருத்ல்.



தொடுவதானது அதிக உணர்வைக் கொண்டதாக



அல்லது உணர்வு அற்றதாக இருத்தல்.

ஒரு சில பொருட்களுக்கு அதிகம் கவரப்படுதல்.



கண்ணுக்குக்கண் தொடர்பு கொள்வதை தவிர்த்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் உளநலனை மேம்படுத்துவது எவ்வாறு?


பிள்ளைகள் சொல்வதை செவிமடுப்போம்


பிள்ளைகளை அன்போடு அரவணைப்போம் உடன் இருப்போம்


உணர்வுகளை மனம் விட்டு பகிர்ந்து கொள்வோம்


பிள்ளைகளுடன் கூடுதலான நேரத்தை செலவழிப்போம்


ஆரோக்கியமான நடத்தைகளுக்கு முன்னுதாரணமாக இருப்போம்


ஆரோக்கியமான கட்டிளமைப்பருவத்தினருடன் கொண்டாடுவோம்


நாளாந்த செயற்பாடுகளை அவர்களே செய்ய வழிப்படுத்துவோம்


கோபத்தை சரியான முறையில் கையாள கற்றுக்கொடுப்போம்




பிள்ளைகளுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றிக் கொடுப்போம்


பிள்ளைகளை புரிந்து கொண்டு வழிநடத்துவோம்


திறந்த கேள்விகளுக்கு இடமளிப்போம்


ஆற்றல்களை வெளிக்கொணர உதவுவோம்


சூழல் பாதுகாப்பை சொல்லிக்கொடுப்போம்


தெளிவான வரையறையுள்ள இலக்குகளை உருவாக்க உதவி செய்வோம்


யதார்த்தத்தை புரியவைப்போம்


நல்ல விடயங்களை பாராட்டுவோம்


சிறுவர் பாதுகாப்பு நெறிமுறைகளை சொல்லிக்கொடுப்போம்


நல்ல, கெட்ட தொடுகைகளை சொல்லிக்கொடுப்போம்


அன்றாடம் ஆன்மிக செயற்பாடுகளில் ஈடுபடுத்துவோம்


பிள்ளைகளுடன் இணைந்து சாந்த வழிமுறைகளில் ஈடுபடுவோம்


உடற்பயிற்சிகளில் ஈடுபட ஊக்குவிப்போம்.


வீதிப்பாதுகாப்பு ஒழுங்குகளை சொல்லிக் கொடுப்போம்


பிள்ளைகளின் முன்பாக முரண்படாது மகிழ்ச்சியாக இருப்போம்


தொடர்பு சாதனங்களுடன் நேரத்தை வரையறை செய்வோம்


போசாக்கான உணவுகளை வழங்குவோம்

Courtesy Mind Hills

Theeraniyam
Open School Learning Center For Autism Spectrum Disorders
Govintan Road, Batticaloa.

Compliment by
**Dr. K. Puvanendran**
Consultant Developmental Pediatrician
NHS Trust - UK

Design by

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org